19th October 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதிலே ஹெட்ஸ் ஆப் டிப்பார்ட்டு மெண்ட்ஸ் எத்தனே பேர் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதிலே ஹெட்ஸ் ஆப் டிபார்ட் மெண்ட்டும் இருக்கிருர்கள்.

விலைவாசி உயர்வு (கண்டனப் போராட்டம்)

* 22 கேள்வி—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விலைவாசி உயர்வுக்குக் கண்டனம் என்ற பெயரால் ஆகஸ்டு மாதம் போராட்டம் நடத்தியதற்காக, எத்தனை கம்யூனிஸ்டுகள் நம் மாநிலத்தில் கைது செய்யப்பட்டார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விலைவாசிகள் ஏற்றத்தை எதிர்த்து 1964 ஆகஸ்டில் நடத்திய கிளர்ச்சியில் 2,040 கம்யூனிஸ்டு கள் கைது செய்யப்பட்டனர்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த இயக்கம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்களில் நானும் ஒருவன். நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்பதை முன்கூட்டியே அறிவித்து, பகிரங்கமாகப் போராட்டத்தைக் குறிப்பிட்ட தேதியில் நடத்த இருந்தபோது, அதை நடத்துவதற்கு முன்கூட்டியே 151-ஆவது செக்ஷன் கீழ் எல்லோரையும் கைது செய்தது நியாயம் தானு? 151-ஆவது செக்ஷன் சந்தேகாஸ்பதமானவர்களைக் கைது செய் வதற்கு வழி செய்வது. அரசியல் கைதிகளின் மீது இந்த செக்ஷனை உபயோகிப்பது நியாயந்தானு?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசியல்வாதிகளாக இருந் தாலும் குற்றம் குற்றமே. விலைவாசி உயர்வுக்காக மறியல் செய் வதை அனுமதிக்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் அபிப் பிராயம். 151-ஆவது செக்ஷனைப் பிரயோகித்து கைது செய்ததை அரசாங்கம் தவறு என்று கருதவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : விலைவாசி மறியல் சம்பந்தமாக ஒரு சமயத்தில் மறியல் செய்த பிறகு கைது செய்திருக்கிருர்களே, இப்போது மறியல் செய்வதற்கு முன்பாகவே 151-ஆவது செக்ஷன் படி கைது செய்திருக்கிருர்களே, இதில் ஏதாவது கட்சிக்குக் கட்சி பாரபட்சம் காட்டும் தன்மை இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்சி பாரபட்சம் இல்லை. அந்த அந்த நிலைமைக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மு. கருணாநிதி : கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்டுத் தோழர்கள் மீது வழக்குகள் போடப்பட்டு அவர்கள் தண்டிக்கப் பட்டார்களா ?

[19th October 1964

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. எனக்குத் தெரிந்த வரையில் வழக்குகள் போடப் பட்டதாக நினைவு இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நாங்கள் முன் கூட்டியே இந்த நேரத்தில், இன்ன இடத்தில் மறியல் செய்யப் போவதாக அறிவித்து இருக்கிறோம். அதன்படி செய்ய எங்களை அனுமதித்து விட்டு, எங்கள் மீது வழக்குகள் தொடர்ந்து தண்டனை கூட வாங்கிக் கொடுத்திருக்கலாம். அதைவிட்டுவிட்டு 151-ஆவது செக்ஷன் பிரகாரம் தடுப்பு நடவடிக்கையை எடுத்ததற்குக் காரணம் சர்க்காருக்கு இவர்கள் மீது அச்சம் ஏற்பட்டுவிட்டதா ? எங்களைக் கண்டு அச்சப்படுவானேன் என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சர்க்காருக்கு ஒருவிதமான அச்சமும் இல்லை. 151-ஆவது செக்ஷன் பிரகாரம் சந்தேகப்படு கிறவர்கள் மீதே நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்றால், சந்தேகத்திற்கு இடமின்றி இன்ன குற்றம் செய்யப் போகிறோம் என்று அறிவித்தவர்கள் மீது, அந்தக் குற்றத்தைச் செய்ய வொட்டாமல் தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்வது தவறு அல்ல.

திரு. எஸ். முருகையன் : அப்படிக் கைது செய்யப்பட்டவர் களில் எத்தனை பேர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது ? இப்போது யாராவது சிறையில் இருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது பற்றிய தகவல் இல்லை யென்று சொன்னேன். எனக்குத் தெரிந்த வரையில் வழக்குத் தொடரப்பட்டதாக நினைவு இல்லை. அவர்களும் அதைத் தொடர்ந்து வேறு ஒரு குற்றமும் செய்யவில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : 1962-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்திய விலைவாசி உயர்வு மறியல் போராட்டத்தில் எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்? எத்தனை பேர்கள் மீது வழக்குகள் போடப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களின் மீது வழக்குகள் போடப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள், ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சியினர் நடத்திய விலைவாசிப் போராட்டத்தில் இவர்கள் மீது வழக்குகள் போடப்படவில்லை என்றதற்கு ஏதேனும் காரணம் உண்டா ? என் இப்படி என்று சொல்ல முடியுமா ?

19th October 1964]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த அந்த நிலைமைக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும். பாரபட்சம் இல்லையென்று தான் முன்பு சொன்னேன்.

திரு. கோ. சி. மணி: திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டம் நடத்தியபோது இருந்த நிலைமை என்ன? கம்யூனிஸ்டுக் கட்சி நடத்த இருந்த சமயத்தில் இருந்த நிலைமை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர்கள் போராட்டம் நடத்திய போது இருந்த நிலைமை வேறு; இவர்கள் போராட்டம் நடத்த இருந்தபோது இருந்த நிலைமை வேறு. இவர்கள் நடத்த இருந்தபோது வழக்குகள் தொடர வேண்டிய நிலைமை இல்லை.

திரு. மு. கருணாநிதி: கம்யூனிஸ்டுகள் போராட்டம் நடத்த இருந்தபோதுள்ள நிலைமை இவர்கள் தேர்தலில் காங்கிரசை ஆதரித்தார்கள் என்பது தானா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இவ்வாறு துணைத் தலைவர் கருதுவது தவறு என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். கம்யூனிஸ்டுகள் காங்கிரசை ஆதரிக்கவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: கம்யூனிஸ்டுகள் காங்கிரசை ஆதரிக்கவில்லை என்று சொன்னார்கள். சமீபத்தில் நடந்த நகர சபைத் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் காங்கிரசை ஆதரிக்க வில்லையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் இப்படிப் பேசுவது சரியல்ல. அதற்கு முன் நடந்த தேர்தலில் அவர்கள் தி.மு.க. வைத்தான் ஆதரித்திருக்கிறார்கள்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டம் நடத்திய காலத்தில் பலாத்காரச் செயல் களில் ஈடுபடச் சந்தர்ப்பம் இருந்தது என்பது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நடவடிக்கை எடுத்துக் கொள்ளாவிட்டால் பலாத்காரம் ஏற்படக்கூடும் என்று உத்தே சித்து முன் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: 1962-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்திய விலைவாசிப் போராட்டத்தின்பொழுது ஏற்பட்ட பலாத்காரத்தை அடக்குவதற்கு சர்க்கார் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சென்னையில் அபிப்பிராயம் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அபிப்பிராயம் இருக்கலாம். அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.